**செ.வெ.எண்: 26** **நாள்: 13.07.2016**

## புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் சுமார் ரூ.26.11 இலட்சம் மதிப்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், மேலத்தானியம் கிராமத்தில் வருவாய்துறையின் சார்பில் மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.07.2016) நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 507 பயனாளிகளுக்கு ரூ.26,11,613 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழக அரசு பொதுமக்களிடமிருந்து குறைகளை மனுக்களாக பெற்று தீர்வுகாணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு கிராமத்தை தேர்வு செய்து மக்கள் தொடர்பு முகாம் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பொன்னமராவதி வட்டம், மேலத்தானியம் கிராமத்தில் இன்று (13.07.2016) மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முகாமிற்காக பெறப்பட்ட 99 முன் மனுக்களில், 87 மனுக்கள் ஏற்கப்பட்டும், 1 மனு தள்ளுபடி செய்யப்பட்டும், 11 மனுக்கள் நிலுவையிலும் உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி நமது மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் சுமார் 22000 ஏழை பெண்களுக்கு சுமார் ரூ.70 கோடி மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சுமார் 86 கிலோ தாலிக்கு தங்கம் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது. நமது மாவட்டத்திலுள்ள பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ரூ.610 கோடி மதிப்பீட்டில் காவிரி கூட்டு குடிநீர்த்திட்டம் அறிவிக்கப்பட்டு பணிகள் முடிவுற்று தற்பொழுது சோதனை ஓட்டம் நடைபெற்று வருவதுடன் விரைவில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது. இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையான வங்கி ஏடிஎம் செயல்பாடு, கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல், பட்டா வழங்குதல், குறைந்த மின்னழுத்தத்தை சரிசெய்தல், சாலையை சீரமைத்தல் போன்ற பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் இம்முகாமில் வருவாய்த்துறையின் சார்பில் 31 பயனாளிகளுக்கு ரூ.2,70,000/- மதிப்பில் விலையில்லா வீட்டு மனைப்பட்டாக்களும், 8 பயனாளிகளுக்கு ரூ.96000 மதிப்பில் முதியோர் உதவித்தொகைக்கான காசோலைகளும், 59 பயனாளிகளுக்கு ரூ.737500 மதிப்பில் இறப்பு நிவாரண உதவித்தொகைக்கான காசோலைகளும், 69 பயனாளிகளுக்கு ரூ.588000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலையும், 200 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும், 43 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் ஆணைகளும், 1 பயனாளிக்கு ரூ.10000 மதிப்பில் நலிந்தோர் நலத்திட்ட உதவித்தொகைக்கான காசோலையும், 12 பயனாளிகளுக்கு ரூ.144000 மதிப்பில் மாற்றுத்திறனாளி உதவித்தொகைக்கான காசோலைகளும், 6 பயனாளிகளுக்கு ரூ.72000 மதிப்பில் விதவை உதவித்தொகைக்கான காசோலைகளும், 1 பயனாளிக்கு ரூ.12000 மதிப்பில் முதிர்கன்னி உதவித்தொகைக்கான காசோலையும், 1 பயனாளிக்கு ரூ.12000 மதிப்பில் கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகைக்கான காசோலையும், 22 பயனாளிகளுக்கு குடும்ப அட்டையில் பெயர் நீக்கமும், 9 பயனாளிகளுக்கு குடும்ப அட்டையில் பெயர் திருத்தமும், 34 பயனாளிகளுக்கு குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தலும், 13 பயனாளிகளுக்கு சிறு, குறு விவசாய சான்றுகளும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 27 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.405000 மதிப்பில் ஆதார நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.5500 மதிப்பில் இரண்டு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டது.

..2..

மேலும் வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 1 பயனாளிகளுக்கு மானிய விலையில் ரூ.30500 மதிப்பில் பவர்கோனாவீடர் கருவியும், 2 பயனாளிகளுக்கு ரூ.400 மதிப்பில் தென்னங்கன்றுகளும், 3 பயனாளிகளுக்கு ரூ.283 மதிப்பில் சிறுதானிய விதைகளும், 4 பயனாளிகளுக்கு ரூ.5030 மதிப்பில் உளுந்து விதைகளும், 2 பயனாளிகளுக்கு மண்வள அட்டைகளும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு 5 ஏக்கர் பரப்பளவில் பயிரிடுவதற்கு மானிய விலையில் ரூ.196000 மதிப்பில் காய்கறி விதைகளும், 1 பயனாளிக்கு ரூ.9800 மதிப்பில் மா அடர் நடவு செய்வதற்கான பழச்செடிகளும், 1 பயனாளிக்கு ரூ.17600 மதிப்பில் கொய்யா அடர் நடவு செய்வதற்கான பழச்செடிகளும் என மொத்தம் 507 பயனாளிகளுக்கு ரூ.26,11,613 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இம்முகாமில் சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கால்நடைபராமரிப்புத்துறை, பொதுசுகாதாரத்துறை, வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை ஆகிய துறைகளின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் தகுதிகள் குறித்து அலுவலர்கள் திட்ட விளக்கவுரையாற்றினார்கள்.

மேலும், காரையூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த சிறப்பு மருத்துவ முகாமில் 203 புறநோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் 303 நபர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டது. மாற்றுத்திறனாளிகளுக்கு நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனம் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும், கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் 220 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், ஆண்மைநீக்கம், தடுப்பூசி, செயற்கைமுறை கருவூட்டல் மற்றும் பிற சிகிச்சைகள் அளிக்கப்பட்டதுடன் சிறந்த கிடேரி கன்று வளர்த்த 3 நபர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சமூகநலத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், கால்நடைபராமரிப்புத்துறை, பொதுசுகாதாரத்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் அமைக்கப்பட்டிருந்த அரங்குகளில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த கண்காட்சியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் மேலத்தானியம் கிராமத்தில் மரக்கன்றினை நட்டார்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, திருமயம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ரகுபதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சந்தோஷ்குமார், வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.வடிவேல்பிரபு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.மனோகரன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.அருணாச்சலம், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மரு.தேவதாஸ், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சூரியகலா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழுத்தலைவர் திரு.அழகுசுப்பையா, வட்டாட்சியர் திரு.மோகன்குமார், துணை வட்டாட்சியர் திரு.கருப்பையா, ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.அமுதவள்ளிமுருகேசன், ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.திலகவதிமுருகேசன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**